உ
சிவமயம்



# திருப்பெருந்துறையில் அருளிச்செய்த
# திருப்பள்ளியெழுச்சி

எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

**www.anpesivam.ch**

| **திருச்சிற்றம்பலம்** | |
|---|---|
| 1. | போற்றியென் வாழ்முத லாகிய பொருளே<br>புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு<br>ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்<br>எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்<br>சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்<br>திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே<br>ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்<br>எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. |
| 2. | அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்<br>அகன்றது உதயம்நின் மலர்திரு முகத்தின்<br>கருணையின் சூரியன் எழஎழ நயனக்<br>கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்<br>திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்<br>திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே<br>அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே<br>அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. |
| 3. | கூவின பூங்குயில் கூவின கோழி<br>குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்<br>ஓவின தாரகை யொளியொளி யுதயத்<br>தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்<br>தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்<br>திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே<br>யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்<br>எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. |
| 4. | இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்<br>இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்<br>துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்<br>தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்<br>சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்<br>திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே<br>என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்<br>எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. |

| | |
|---|---|
| 5. | பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்<br>போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்<br>கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்<br>கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்<br>சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா<br>சிந்தனைக் கும்அரி யாயெங்கண் முன்வந்து<br>ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்<br>எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. |
| 6. | பப்பற வீட்டிருந் துணருநின் அடியார்<br>பந்தணை வந்தறுத் தாரவர் பலரும்<br>மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்<br>வணங்குகின் றாரணங் கின்மண வாளா<br>செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்<br>திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே<br>இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்<br>எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. |
| 7. | அதுபழச் சுவையென அமுதென அறிதற்<br>கரிதென எளிதென அமரரும் அறியார்<br>இதுஅவன் திருவுரு இவனவன் எனவே<br>எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்<br>மதுவளர் பொழில்திரு வுத்தர கோச<br>மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா<br>எதுஎமைப் பணிகொழு மாறது கேட்போம்<br>எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. |
| 8. | முந்திய முதல்நடு இறுதியு மானாய்<br>மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்<br>பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்<br>பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே<br>செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்<br>திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி<br>அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்<br>ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. |
| 9. | விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா<br>விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்<br>மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே<br>வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்<br>கண்ணகத் தேநின்று களிதரு தேனே<br>கடலமு தேகரும் பேவிரும் படியார்<br>எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்<br>எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. |
| 10. | புவனியிற் போய்பிற வாமையில் நாள்நாம்<br>போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி<br>சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்<br>திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்<br>அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்<br>படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்<br>அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்<br>ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. |